# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056 ஜனவரி 25, 2025

Weekly E-paper • January 25, 2025








# வீர வணக்கம்!

சுப.வீரபாண்டியன்

## 2025 தலைமைச் செயற்குழுத் தீர்மானங்கள்

## கோமியம்... கோமியம்

தலையங்கம்

## நம்முடைய பகை இலக்கு....!

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056 ஜனவரி 25, 2025

Weekly E-paper • January 25, 2025


# வீர வணக்கம்!

சுப.வீரபாண்டியன்

வட இந்தியாவிற்குச் செல்லும்போது, நீங்கள் ஏன் எப்போதும் இந்தியை எதிர்க்கின்றீர்கள் என்று சிலர் கேட்கின்றனர். இந்தியை மட்டும் இல்லை, நாங்கள் எந்த மொழியையும் எதிர்ப்பதில்லை. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாட்டில், பல்வேறு மொழிகள் நடைமுறையில் இருக்கும் போது, ஒரே ஒரு மொழியை மட்டும் எல்லோர் மீதும் திணிக்கும் அந்த ஜனநாயகத்திற்கு எதிரான போக்கையே எதிர்க்கிறோம் என்று விளக்கம் சொல்வதுண்டு!




மூன்றாவதாக ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது நல்லது தானே என்று சிலர் கேட்பார்கள். நல்லதுதான்! மூன்றாவதாக மட்டுமில்லை முப்பதாவதாகக் கூடப் பல மொழிகளை நாம் கற்றுக் கொள்ளலாம்! மொழி அறிவு நல்லது! அது அவரவர் விருப்பம்! எந்த ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதும், அவரவருடைய திறமைக்கும், தேவைக்கும் உரியது! இரண்டும் இல்லாதவர்கள் மீது, எந்த ஒரு மொழியைத் திணிப்பதும் சர்வாதிகாரத் தன்மையுடையது!

அந்தச் சர்வாதிகாரப் போக்கு, வட இந்தியாவில் இருக்கும் பலரிடமும், ஆட்சியாளர்களிடமும் இருப்பதால்தான் இந்தியாவில் வேறு எதனையும் விட, மொழிச் சிக்கல் மிகப்பெரியதாக இருக்கிறது!

பாடமொழி, பயிற்று மொழி, ஆட்சி மொழி, நீதிமன்ற மொழி, வழிபாட்டு மொழி என்று மொழியின் பயன்பாடு பலவகையானது! எல்லா நிலையிலும் அவரவர் தாய்மொழியே இடம்பெறுவது, எளிதானது, இயற்கையானது, எதிர்கால வளர்ச்சிக்குப் பயன்படுவது!

பிற மொழியினருடன் தொடர்பு கொள்வதற்கு, இன்னொரு மொழி எல்லோருக்கும் தேவைப்படலாம்! அந்த மொழியைத் தேர்ந்தெடுக்கும் போது, அது தொன்மையான மொழியா, சிறந்த மொழியா, அறிவியல் மொழியா என்றெல்லாம் கூடப் பார்க்க வேண்டியதில்லை! ஏற்கனவே அந்த மொழி பலரிடமும் பரவி உள்ளதா, பயன்படுத்துவதில் சிரமம் இல்லாமல் இருக்கிறதா என்று மட்டும் பார்த்தால் போதுமானது!

அந்த வகையில் பல பகுதிகளிலும் பரவி உள்ளது ஆங்கிலமே! அதனை உலக மொழி என்று நாம் அழைக்க வேண்டியதில்லை. அதே நேரம் உலகில் கூடுதல் மக்களால் அறியப்பட்டு இருக்கும் மொழி ஆங்கிலம் தான் என்பதை மறுக்க வேண்டியதும் இல்லை! உலகின் பல நாடுகளை அவர்கள் கைப்பற்றி ஆண்டதால், ஆட்சி அதிகாரத்தின் வழி மொழியும் பரப்பப்பட்டு விட்டது என்பதே எதார்த்தம்!

இந்த நடைமுறை உண்மையை மிகச் சரியாக உள்வாங்கிக் கொண்டு, தமிழ்நாட்டில் அன்றும் இன்றும் திராவிட இயக்கம் இரு மொழிக் கொள்கையையே முன்வைக்கிறது. ஒன்று, தாய் மொழியான தமிழ்! இன்னொன்று, தொடர்பு மொழியாகப் பயன்படக்கூடிய ஆங்கிலம்!

இந்த இயற்கை உண்மைக்கு மாறாக, பெரும்பான்மைவாதத்தின் ஒரு கூறாக, இந்தி திணிக்கப்பட்டதால்தான், தமிழ்நாடு அதனைக் கடுமையாக எதிர்த்தது. எத்தனையோ போராட்டங்கள், எத்தனையோ உயிர்ப்பலிகள் என்று தலைமுறை தலைமுறையாகத் தமிழ்நாட்டில் அந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது!

இந்த எளிமையான இயற்கையான மொழிக் கொள்கையை இந்தியாவில் பிற மாநிலங்களும் பயன்படுத்தி இருந்தால், அந்த மாநிலத்தின் இளைஞர்களும் கல்வியில் சிறந்து விளங்கி, பொருளாதாரத்திலும் மேம்பட்டு இருப்பார்கள்! இந்தியை மட்டும் படித்தால் போதும் என்ற நிலையை அங்கு உருவாக்கியதால் தான் அவர்கள் நாடு முழுவதும் கூலித் தொழிலாளர்களாகப் பயணப்பட வேண்டி இருக்கிறது!

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பல களங்களைத் தமிழ்நாடு கண்டிருக்கிறது! அவற்றுள் ஒன்று, 1965 ஜனவரி 25 ஆம் தேதி தொடங்கியது! அந்தப் போராட்டத்தில் தங்களைத் தாங்களே எரித்துக் கொண்ட, நஞ்சு அருந்தி மாண்ட , துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான அத்தனை மாவீரர்களுக்கும் நம் வீரவணக்கம்! •

# 2025 தலைமைச் செயற்குழுத் தீர்மானங்கள்




19-01-2025 ஞாயிறு காலை, சென்னை, பேரவைத் தலைமை அலுவலகத்தில், பேரவைத் தலைவர் தலைமையில், பேரவைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் முன்னிலையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள் :

1. பெரியார் மீது தொடர்ந்து அவதூறு பரப்பும் சீமானின் கட்சியை எதிர்த்து 22.01.25 அன்று, பெரியாரிய உணர்வாளர்கள் நடத்தவிருக்கும் முற்றுகைப் போராட்டத்திற்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை, தன் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது!
2. ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் திமுக வேட்பாளரை ஆதரித்து வெற்றி பெறச் செய்ய எல்லா விதத்திலும் பணியாற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.
3. பேரவையின் 17 ஆவது மாநிலப் பொதுக்குழுக் கூட்டத்தை வரும் ஜூலை 27 ஞாயிற்றுக்கிழமை அன்று, மதுரையில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது!
4. கல்வி உதவித் திட்ட இயக்குநர் தோழர் லாரன்ஸ் அவர்களுடன் தோழர்கள் செல்வின், பேரா. சாமி ஆகியோர் இணைந்து செயல்பட முடிவெடுக்கப் பட்டது.
5. இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து, அறம் மதி இம்மாத இறுதிக்குள் அறிக்கை அளிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டது.
6. பேரவையின் திராவிட முழக்கம் மாத இதழ் தொடர்பாக நிதி திரட்டுதல் குறித்து சாரதாதேவி மற்றும் ஆசிரியர் குழு இம்மாத இறுதிக்குள் அறிக்கை அளிக்கவும் கேட்டுக் கொள்ளப் பட்டது.
7. இவ்வாண்டு, பேரவை நாள் (ஏப்ரல் 29) நிதியினை, மண்டல வாரியாகத் திரட்டுவதென்று தீர்மானிக்கப் பட்டது.



## ஆவடி பொறுப்பாளர் நியமனம்

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஆவடி மாநகரப் பேரவை அமைப்பாளராக ஆவடி மூர்த்தி அவர்கள் நியமனம் செய்யப் படுகிறார்

-சிற்பி செல்வராஜ்
(பொதுச்செயலாளர்)

## 19 ஆவது ஆண்டில்...



தோழர்களுக்கு வணக்கம்!

22.01.2007 அன்று நம் திராவிட இயக்கத் தமிழர் பேரவை, சென்னையில், இனமானப் பேராசிரியர் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது! நம்மால் இயன்றதைச் செய்தும், இடைவிடாமல் செய்தும், 18 ஆண்டுகளை நிறைவு செய்து இருக்கிறோம்! இதோ... இன்று நம் பேரவை 19 ஆவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது! மகிழ்வையும், ஊக்கத்தையும், தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தையும், தோழர்கள் அனைவருடனும், இந்த அதிகாலைப் பொழுதில் பகிர்ந்து கொள்கிறேன்! நன்றி!

-சுப.வீரபாண்டியன்
(பேரவைத் தலைவர்)

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## கோமியம்...கோமியம்

மாட்டுக்கோமியம் குடித்தால் காய்ச்சல் நீங்கும், நோய்கள் விலகும், அது உடலுக்கு மிகவும் நல்லது என்று சென்னை ஐ.ஐ.டி இயக்குநர் காமகோடி அண்மையில் ஒரு பிரச்சனையை கிளப்பிவிட்டார்.

மேலோட்டமாகப் பார்த்தால் இது சாதாரணம்தான், ஆனால் இந்துத்துவக் காவிகள், தமிழ் மக்கள் மீது தொடுக்கும் ஒருவகையான பண்பாட்டுப் போர் இது.

ஆர்.எஸ்.எஸ்- பா.ஜ.கவினர் காலூன்ற முடியாத தமிழ்நாட்டில் மாட்டரசியல்/கோமிய (மூத்திர)அரசியலை நுழைக்க முயல்கிறது.

மாட்டு அரசியல் உத்தரப் பிரதேசத்தில் சாணம் கலந்த கோமியம் அதாவது மாட்டு மூத்திரம் குடிக்கும் அளவுக்கு காவிகளுக்குக் கைகொடுத்தது.

அதுபோல 'பசு புனிதம்' என்று இந்துத்துவப் போர்வையில் அதைத் தமிழ்நாட்டிலும் நுழைக்கப் பார்க்கிறது காவி அரசியல்.

அறிவியல் அடிப்படையில் மருத்துவர்களும், அறிவியல் ஆய்வாளர்களும் 'கோமியத்தை' மறுத்து விட்டார்கள்.

ஆனால் அறிவியல், விஞ்ஞானத்தின் வழியாக மருத்துவம் படித்த தமிழிசை சவுந்தரராஜன் மாட்டுக் கோமியத்தை மருந்துக்கு இணையாகச் சொல்கிறார். அண்ணாமலை, எச்.ராஜா, வானதி சீனிவாசன் போன்ற காவி இந்துத்துவங்கள் காமகோடிக்கு ஒத்து ஊதுகிறார்கள் என்றால் அதற்குப் பின்னணியில் இருப்பது காவிச் சாயம்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்நாட்டில் வாழும் இந்துக்கள், பெரியாரிய சிந்தனையில் இருப்பவர்கள் என்பதை ஒவ்வொரு தேர்தல்களும் சொல்கின்றன.

உ.பியை நினைத்துக் கொண்டு தமிழ்நாட்டில் மாட்டு அரசியல், மாட்டு மூத்திர அரசியல் செய்ய முனையும் காவிச் சங்கிகள், ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க கூட்டம் தெறித்து ஓடப்போகிறது தமிழ்நாட்டில் இருந்து, தமிழ் மக்களிடம் இருந்து - வழக்கம் போல!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408





19-01-2025 அன்று நடைபெற்றத் தலைமைச் செயற்குழு அன்று 'திராவிட முழக்கம்' இதழுக்கு மதுரை மாவட்டம் சார்பாக துணைப்பொதுச்செயலாளர் வைரமுத்து ரூபாய் 10,000/=, திருப்பூர் மாவட்டம் சார்பாக தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.இளங்கோவன் ரூபாய் 4,000/= ஆண்டுச் சந்தாக்களாக வழங்கினார்கள்.

# நம்முடைய பகை இலக்கு....!

## மதிவாணன்

பெரியார் இருக்கும் போதும் சரி, அவர் மறைந்தபின்னும் சரி, காவிக் கூட்டங்களால் பெரியாரைக் கடந்து செல்ல முடியவில்லை. பெரியாரின் கொள்கைத் தாக்கம், அதன் வீரியம் இன்றளவும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. பெரியாரின் கொள்கைகளை விமர்சிக்க முடியாதவர்கள் அவர்மீது பொய்சொல்லி அவதூறு வீசுகின்றனர். தந்தைபெரியார், “என் கருத்திற்கான பரப்புரையை என் எதிரிகள் பார்த்துக் கொள்வார்கள்” என்று அன்றே சொல்லிவிட்டார்.




“விடுதலைப் புலிகள் கியூபாவில் நடந்த நிகழ்விலும், ’போரும் சமாதானமும்’ என்ற ஏட்டிலும் அவர்களின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் அவர்கள் தங்களைத் திராவிடராகவே அடையாளப் படுத்தி இருப்பது இந்த சீமான் அறியவில்லை போலும். புலிகளின் தளபதி, தலைவர் பிரபாகரன் அவர்களின் சட்டையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு இருக்கும் சீமான் திராவிடரைத் திருடர் என்று சொல்வதன் மூலம் புலிகளையும், அவர்களின் தலைவரையும் திருடர்கள் என்று சொல்கிறாரா அந்தச் சீமான்?”

திராவிடர்கள் திருடர்கள், திராவிடர்கள் குருடர்கள் , தமிழினத்தைப் போல மானங்கெட்ட இனம் உலகிலேயே இல்லை என்று பேசுகிறார் சீமான். இவை எல்லாம் தமிழர் மீது உள்ள அன்பினாலா சொல்கிறார்? தந்தை பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று சொல்லி விட்டாராம். குதிக்கிறார் சிமான். ஏன் அப்படிச் சென்னார்? இராமாயணம், மகாபாரதம், வேதபாராயணங்கள் போன்றவை பக்தி இலக்கியங்கள் என்ற பெயரால் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டு, மூடத்தனங்களைத் திணித்துத் தமிழ்மொழியில் எழுதப்பட்டதால் தமிழைக் காட்டு மிராண்டித் தனமாகப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று அப்படிச் சொன்னார். அதை ஒரு குறியீடாகச் சொல்லியிருக்கிறார் பெரியார். ’தீ பரவட்டும்’ என்ற அண்ணாவின் சொற்பொழிவு பெரியாரை உறுதி செய்வதாகத் தானே அமைந்திருக்கிறது. அவைகளை ஒதுக்கிவிட்டு நம்முடைய சங்கத் தமிழ் இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு போன்ற மேல்கணக்கு நூல்களையும், திருக்குறள், நாலடியார் போன்ற கீழ்கணக்கு நூல்களையும் தமிழின் அடையாளமாக மக்கள் முன் கொண்டு வந்தவர்கள் பெரியாரின் வழித் தோன்றல்கள் என்பதை சீமான் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை.

அடுத்து, தன்னைவிடச் சிறிய வயது பெண்ணை சொத்துக்காகத் திருமணம் செய்தார் பெரியார் என்று சொல்கிறார் அந்தச் சீமான். மறுக்கவில்லை நாம். அதில் ஒரு சமூகப் பார்வை இருந்தது. அதேசமயம் சீமான் தனக்கு மகள் வயது ஒத்த இளைய பெண்ணைத் தானே திருமணம் செய்திருக்கிறார்.

தனிப்பட்ட எவரையும் விமர்சிப்பது நம் நோக்கமல்ல. இருந்தாலும் சீமானின் வக்கிரப் பேச்சு அவருக்கே திரும்பும் என்பதை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் கியூபாவில் நடந்த நிகழ்விலும், ’போரும் சமாதானமும்’ என்ற ஏட்டிலும் அவர்களின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் அவர்கள் தங்களைத் திராவிடராகவே அடையாளப் படுத்தி இருப்பது இந்த சீமான் அறியவில்லை போலும். புலிகளின் தளபதி, தலைவர் பிரபாகரன் அவர்களின் சட்டையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு இருக்கும் சீமான் திராவிடரைத் திருடர் என்று சொல்வதன் மூலம் புலிகளையும், அவர்களின் தலைவரையும் திருடர்கள் என்று சொல்கிறாரா அந்தச் சீமான்?

ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க போன்ற காவிகளால் என்ன முயன்றாலும் தமிழ்நாட்டில் காலூன்ற முடியவில்லை. ஆகவே அந்தக் காவிக்கும்பலின் கையாளாக, அவர்களுக்குப் பிடிக்காத தந்தை பெரியாரை எதிர்க்கும் வேலையை சீமான் சுமந்து கொண்டு இருக்கிறார், காவிச் சங்கிகளுக்கு ஆதரவாக.

ஆகவே, நம் பகை இலக்கு வடக்கே ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க என்றால், தமிழ்நாட்டில் சிங்களச் சீமான் தான்! ●